பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 06 2024 6 45
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

1, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக திரு நரேந்திரமோடி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2. அரசியல் சாசன உரிமைகளை பாதுகாக்க முன்வரும் கட்சிகளை எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வரவேற்பதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

3. சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற ஆந்திரா மற்றும் ஒடிஸா மாநிலங்களில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

4. தமிழகத்தில் அரசு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கடந்த மாதம் வரை 53 லட்சத்து 48 ஆயிரத்து 663 பேர் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் அயர்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான முயற்சிகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது.

திரு நரேந்திரமோடி விரைவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக புதுதில்லியில் நேற்று தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக பிஜேபி-யின் மூத்த தலைவர் திரு நரேந்திரமோடி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

திரு நரேந்திர மோடி தலைமையில் மூன்றாவது முறையாக புதிய அரசை அமைப்பதற்கான செயல்திட்டங்கள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது,

இதில் தெலுங்கு தேசம் கட்சித்தலைவர் திரு சந்திரபாபு நாயுடு, ஐக்கிய ஜனதாதள தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார், லோக் ஜன்சக்தி கட்சியின் ராம்விலாஸ் பிரிவின் தலைவர் திரு சிராக் பாஸ்வான் மற்றும் இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான ஆதரவு கடிதங்களையும் இக்கூட்டத்தில் வழங்கினர்,

இந்நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைவதற்கு மேலும் பத்து சுயேட்சை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆதரவு கடிதங்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி, விரைவில் குடியரசுத் தலைவரை சந்திக்க உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் கூட்டம் புதுதில்லியில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி, திருமதி பிரியங்கா காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், மார்க்சிஸட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் திரு சீதாராம் யச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் திரு டி ராஜா, தேசியவாத காங்கிரஸ் தலைவர் திரு சரத்பவார், திமுக தலைவர் திரு மு க ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவைத் தேர்தலில் மக்களின் தீர்ப்பு பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு எதிராக கிடைத்துள்ளது என்று கூறினார்.

பிஜேபி-க்கு மிகப்பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இது பிரதமருக்கு ஏற்பட்டுள்ள தார்மீக ரீதியிலான தோல்வி என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்க முன்வரும் கட்சிகளை எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வரவேற்பதாகவும் திரு கார்கே கூறினார்,

**[]<<<>>>[]**

புதிய அரசு அமையும் வகையில் பதவி விலகி உள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நேற்று இரவு விருந்து அளித்தார்.

இதில் பிரதமர் திரு நரேந்திரமோடி, மூத்த மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத்சிங், திரு அமித்ஷா, திருமதி நிர்மலா சீதாராமன், திரு நிதின்கட்கரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்,

**[]<<<>>>[]**

18-ஆவது மக்களவை உறுப்பினர்களை வரவேற்பதாக மக்களவை செயலகம் கூறியுள்ளது.

புதிய உறுப்பினர்களை ஆன் லைன் முறையில் பதிவு செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக செயலகம் தெரிவித்துள்ளது.

மின்னணு முறையை முழு அளவில் கொண்டுவந்து காகிதமில்லா நடைமுறையை முழு அளவில் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய உறுப்பினர்கள் பாரத ஸ்டேட் வங்கியில் தங்களது கணக்குகளை தொடங்கவும், அடையாள அட்டை, மத்திய அரசின் சுகாதார திட்ட அட்டை ஆகியவற்றை உறுப்பினர்களுக்கு உடனடியாக வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்ற ஆந்திரா மற்றும் ஒடிஸா மாநிலங்களில் புதிய அரசு அமைப்பதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன.

ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சி புதிய அரசை அமைக்கவுள்ளது.

இதற்காக அம்மாநிலத்தில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள தெலுங்கு தேசம் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் விரைவில் கூடி சட்டப்பேரவை கடசித் தலைவராக திரு சந்திரபாபு நாயுடுவை தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

தேர்தலில் தோல்வியை சந்தித்ததை அடுத்து அம்மாநில முதலமைச்சர் திரு ஜெகன் மோகன் ரெட்டி தமது பதவியை நேற்று ராஜிநாமா செய்தார்.

புதிய அரசு அமையும் வரை தற்காலிக முதலமைச்சராக தொடருமாறு ஆளுநர் அவரை கேட்டுக் கொண்டார்.

ஒடிஸா மாநிலத்தில் பிஜேபி தலைமையில் புதிய அரசு அமையவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் அம்மாநில தலைநகர் புவனேஸ்வரில் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

விரைவில் பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது.

தேர்தல் தோல்வியை அடுத்து ஒடிஸா முதலமைச்சர் திரு நவின் பட்நாயக் தமது பதவியை நேற்று ராஜிநாமா செய்தார்.

**[]<<<>>>[]**

கூட்டணி ஆட்சியை நடத்துவதில் பிஜேபி-க்கு நீண்ட அனுபவம் உள்ளதாக அக்கட்சியின் மகளிர் அணி தேசிய தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கவுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முழுமையாக நல்லாட்சியை வழங்கும் என்று கூறியுள்ளார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மைக்கு தேவையான இடங்களுக்கும் கூடுதலாக பெற்றிருப்பது வரலாற்று சாதனை என்றும் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அரசு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கடந்த மாதம் வரை 53 லட்சத்து 48 ஆயிரத்து 663 பேர் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஆண்கள் 24 லட்சத்து 63 ஆயிரத்து 81 பேரும், பெண்கள் 28 லட்சத்து 85 ஆயிரத்து 301 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 281 பேரும் வேலைக்காக பதிவு செய்திருப்பதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இம்மாதம் அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெயர் பதிவு செய்வது மேலும் அதிகரித்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டி மாவட்டங்களிலும், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், செங்கல்பட்டு, மயிலாடுதுறை, நாமக்கல், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இதனிடையே, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் நேற்று மாலை மிதமான மழை பெய்தது.

குமரிகடல், மன்னார்வளைகுடா, தமிழக கடலோரப் பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிக்குச் செல்ல வேண்டாம் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

[]<<<>>>[]

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில், கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இடைக்கால ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை தில்லி நீதிமன்றம் நிராகரித்தது.

தனி நீதிபதி திருமதி காவேரி பவேஜா, திரு கெஜ்ரிவாலின் மனுவை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவில் ஏழு நாட்கள் மருத்துவ காரணங்களுக்காக ஜாமீன் வழங்க முடியாது என்றும் திகார் சிறை அதிகாரிகள் திரு கெஜ்ரிவாலின் மருத்துவ தேவைகளை கவனித்துக்கொள்வார்கள் என்றும் உத்தரவிட்டார்.

திரு கெஜ்ரிவாலின், ஜாமீன் மனு வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவுள்ளதை சுட்டிக்காட்டிய நீதிபதி, இடைப்பட்ட காலத்தில் ஜாமீன் வழங்க இயலாது என்றும் கூறினார்.

[]<<<>>>[]

தூதரக உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையும் - மாலத்தீவும் முடிவு செய்துள்ளன.

[]<<<>>>[]

உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் இந்தியாவின் பாம்பே ஐ ஐ டி இடம்பெற்றுள்ளது.

[]<<<>>>[]

நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தி மூவாயிரத்து 288 லட்சம் டன்னாக இருக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மத்திய தொலைத் தொடர்புத்துறை தொடங்கியுள்ளது.

[]<<<>>>[]

சத்திரபதி சிவாஜியின் மகராஜின் 350-வது முடிசூட்டும் விழா குறித்த கண்காட்சிக்கு தேசிய நவீன கலைக்கூடம் புதுதில்லியில் ஏற்பாடு செய்துள்ளது.

[]<<<>>>[]

நாட்டிலேயே முதல் முறையாக மகாராஷ்டிரா மாநிலம் மும்பை மாநகராட்சியில் பருவ நிலைக்கான தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

விருதுநகரில் வருமான வரி செலுத்துவோருக்கான விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

நெல்லையில் நில அதிர்வு ஏற்பட்டதாக வெளியான தகவல் வெறும் வதந்தி என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் அயர்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நியூயார்க்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய அயர்லாந்து அணி 16 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 96 ரன் எடுத்தது.

97 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா 12 புள்ளி இரண்டு ஓவரில் இரண்டு விக்கெட்களை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

பப்புவா – நியூகினியா – உகாண்டா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது ப்ராவிடன்ஸில் நடைபெற்று வருகிறது.

பிரிஸ்டவுனில் இன்று இரவு எட்டு மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரேலியா – ஓமனை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று குவைத்தை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

ப்ரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதியில் இன்று இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின மேத்யூ எப்டன் இணை - இத்தாலி இணையை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

சர்வதேச மல்யுத்தப் போட்டி அங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் இன்று தொடங்குகிறது.

இதில் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள இந்திய வீரர்கள் ஐந்து பேர் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

ஜெர்மனியில் நடைபெறும் சர்வதேச துப்பாக்கிச்சுடும் போட்டியின் ஆடவர் பத்து மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவு இறுதி ஆட்டத்திற்கு இந்திய வீரர் சரப்ஜோத்சிங் தகுதி பெற்றுள்ளார்.

ஏற்கனவே இந்திய வீராங்கனைகள் ரமிதா, இஷாசிங் ஆகியோர் இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

***End of News***